மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவரவர்களே, இப்போது புதுக்கோட்டை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பாலிடெக்னிக் இல்லை என்ற காரணத்தால் அங்கே பாலிடெக்னிக்கை ஏற்படுத்த வேண்டும் என்று அரசு முடிவு எடுத்திருக்கின்றது. ஆகவே அந்த இரண்டு மாவட்டங்களிலும் பாலிடெக்னிக் ஆரபிக்கப்பட்ட பிறகு மற்ற இடங்களிலே யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள்: தலைவரவர்களே, முந்தைய சட்டமன்றத் தொடர் கூட்டத்தில் விளாத்திகுளம் பகுதியில் பாலிடெக்னிக் ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அமைச்சரவர்களும் அதனைப் பரிசீலனை செய்வதாகப் பதில் அளித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரூரில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்படுமா என்பது பற்றிய கேள்வி இது, ஆகவே ஒவ்வொரு இடமாகக் கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது.

திரு. ரா. கு. பெருமாள்: தலைவரவர்களே, அடுத்த ஆண்டாவது தமிழ்நாட்டிலே எங்கெங்கு பாலிடெக்னிக் தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, முந்திய கேள்விக்குச் சொன்ன பதிலைத்தான் நான் இதற்கும் சொல்ல விரும்புகிறேன். புதுக்கோட்டை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பாலிடெக்னிக் ஆரம்பிக்கப்பட்ட பிறகுதான் மற்றவை பற்றி பரிசீலிக்கப்படும்.

மதுரை சட்டக் கல்லூரியில் சட்டமேற்படிப்பு.

*வினா எண் 145: திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை சட்டக்கல்லூரியில் சட்ட மேற்படிப்பு(எம்.எல்) ஆரம்பிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:— (அ) ஆம். மதுரை சட்ட கல்லூரியில் சட்ட மேற்படிப்பில் (எம் எல்) சொத்துரிமைச் சட்டம் என்னும் பிரிவு ஆரம்பிக்க திட்டம் உள்ளது.

(ஆ) மேற்கூறிய சட்ட மேற்படிப்பு (எம்.எல்.) 1980-81 ஆம் கல்வி ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்படும்.

1981 பிப்ரவரி 2]

திரு. ப. நெடுமாறன்: தலைவரவர்களே, மதுரை சட்டக் கல்லூரியில் எம். எல். படிப்பு ஆரம்பிக்க அரசு முடிவு செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். அங்கே ஏற்கெனவே இருக்கின்ற சட்டக் கல்லூரியின் ஹாஸ்டலுக்கு சொந்தக் கட்டடம் இல்லை. ஆகவே அதையும் உடனடியாகச் செய்து தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அது பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, எம் எல். படிப்புக்கு எவ்வளவு பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்? மேலும் இவர்கள் படித்து முடித்த பிறகு மற்றவர்களைப் போல வேலை கேட்டு அரசிடம் முறையீடு செய்வதில்லை தாங்கள் கற்ற அறிவைக் கொண்டு தாங்களே முன்னேறுகிறார்கள். ஆதலால் அந்த மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு முடிவு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அது பற்றிய முழு விவரமும் இப்போது என்னிடம் இல்லை. எந்த அளவுக்கு மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்கின்ற பொறுப்பு அரசுக்கு உண்டு. ஆனால் அதிகமான அளவுக்கு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்ற நிலையில் இந்த மாதிரி பட்டமேற்படிப்புகளை நாம் கருதக் கூடாது.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அமைச்சரவர்கள் எம். எல். படிப்புக்கு மதுரையைத் தேர்ந்தெடுத்தது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். இது வரவேற்கத்தக்கது. ஆனால் இந்த நிலையில் உயர்நீதிமன்றத்தின் பிரிவு ஒன்றும் மதுரையில் இருந்தால் இந்த எம். எல். பட்டப்படிப்புக்கு பல வகையிலே உதவியாக இருக்கும் ஆகவே அதற்குரிய செயற்குறிப்பை அரசு வைத்துக் கொண்டிருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அது கல்வித் துறையின் கீழ் வருவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிய உணவுக்குத் தரப்படும் மானியம்.

*வினா எண். 146 திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதிய உணவு திட்டத்தின் கீழ் அரசு வழங்குகின்ற 15 காசும் நகராட்சிகள் வழங்குகின்ற 5 காசும் ஒரு மாணவனுக்கு அல்லது மாணவிக்கு கொடுக்கப்படுவது அதிகரிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?